**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

STC.No. 315/2025
பெயர்: D.பாபு
த/பெ : தர்மலிங்கம்
வயது : 51
ஊர் : இலுப்பூர்

D.பாபு ஆகிய நான் சத்தியத்தின் பேரில் கூறும் வாக்குமூலம் என்னவென்றால் எதிரி மலைச்சாமியும், நானும் நண்பர்கள் . அந்த வகையில் எதிரி தனது குடும்ப அவசர செலவிற்காகவும், முன் கடனை தீர்ப்பதற்காகவும் என்னிடம் கடந்த 15.08.2025 ம் தேதி ரூ.3,00,000/- கடனாக பெற்றுக் கொண்டுள்ளார். அக்கடனுக்காக அன்றைய தேதியிலேயே 26.09.2025 ம் தேதியிட்டு எதிரி தமக்கு வங்கி கணக்குள்ள "இந்தியன் வங்கி, நார்த்தாமலை" கிளையின் காசோலை ஒன்றை ரூ.3,00,000/- க்கு பூர்த்தி செய்து கொடுத்துள்ளார். அக்காசோலை எண்.520089 ஆகும். அக்காசோலையை நான் வங்கி கணக்கு வைத்துள்ள ஆக்சிஸ் வங்கி, வீரப்பட்டி கிளையில் கடந்த 26.09.2025 ம் தேதியன்று வசூலுக்காக தாக்கல் செய்தேன். அக்காசோலை எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை (FUNDS INSUFFICIENT) என்ற காரணத்தினால் திருப்பப்பட்ட விபரம் எனக்கு கடந்த 15.11.2025 ம் தேதியன்று தெரிய வந்தது. எதிரி கொடுத்த காசோலை திருப்பப்பட்ட விபரங்கள் கண்டு நான் எனது வழக்கறிஞர் மூலம் 17.11.2025 ம் தேதி எதிரிக்கு சட்டப்பூர்வமான அறிவிப்பு அனுப்பினேன். அவ்வறிவிப்பினை எதிரி 19.11.2025 ம் தேதி பெற்றுக் கொண்டார். அறிவிப்பை பெற்றுக் கொண்ட எதிரி நாளது தேதிவரை பணமோ, பதிலோ தரவில்லை, எதிரி தனது வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று நன்கு தெரிந்திருந்தும் என்னை ஏமாற்றி நம்பிக்கை மோசடி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் காசோலை கொடுத்து செயல்பட்டுள்ளார். எதிரியின் செய்கை மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழ் தண்டிக்ககூடியதாகும்.